සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 10 | විෂයය / பாடம் / Subject: சைவநெறி | පත්‍රය / வினாத்தாள் / Paper: I,II | පැය / மணித்தியாலம் / Hours: 03 |

නම
பெயர்
Name

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 – 40 வரையான வினாக்களுக்கு 1,2,3,4 என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான விடையை தெரிவு செய்யவும்**
- **உங்களுக்கு தரப்பட்டுள்ள விடைத்தாள்களில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையின் இலக்கத்தினுள் (x) புள்ளடி இடவும்**

1. சைவ சமயத்தின் மூலமான மெய்ப்பொருளாக விளங்குபவர்.
   1. முருகன் 2. விநாயகர்
   3. சிவபெருமான் 4. உருத்திரன்

2. நரகாசுரன் மெய்யறிவு பெற்றத் திருநாளகத் திகழ்வது.
   1. தைப்பொங்கள் 2. ஆடிப்பூரம்
   3. ஆடிப்பிறப்பு 4. தீபாவளி

3. காலத்தால் பிற்பட்ட வேதமாக அமைவது
   1. அதர்வவேதம் 2. யசுர்வேதம்
   3. சாமவேதம் 4. இருக்குவேதம்

4. சிவபெருமானால் அருளப்பட்ட நூல்களாக அமைந்தவை.
   1. பகவத்கீதை 2. ஆகமங்கள்
   3. தேவாரங்கள் 4. திருப்பாவை

5. புகழனாருக்கும், மாதினியாருக்கும் மகளாக பிறந்தவர்
   1. புனிதவதியார் 2. பரவையார்
   3. ஆண்டாள் 4. திலகவதியார்

6. தேர்களின் வடிவமைப்பை எடுத்துக்கூறும் நூல்
   1. பெரியபுராணம் 2. மானசாரம்
   3. திருவாசகம் 4. திருமந்திரம்

7. சைவ சமயத்தை புத்தெழுச்சிப் பெறச் செய்தவர்கள்
   1. நாயன்மார்கள் 2. ஆழ்வார்கள்
   3. சிவாச்சாரியர்கள் 4. சந்நியாசிகள்

8. அகச்சந்தானக் குரவர்களில் முதன்மையானவர்.
   1. மெய்கண்டதேவர் 2. அருணந்தியார்
   3. திருநந்திதேவர் 4. உமாபதி சிவாச்சாரியார்

9. ஐந்தொழில்களை குறிக்கும் உற்சவமாக அமைவது.
   1. மகாளயம் 2. மகோற்சவம்
   3. இரதோற்சவம் 4. தீர்த்தோற்சவம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

10. யோக நெறி நின்றோர் அடையும் முக்தியாவது
1. சாலோகம் 2. சாயுச்சியம் 3. சாமீபம் 4. சாரூபம்

11. பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கிய அற்புதத்தைப் புரிந்தவர் .
1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர்
3. சுந்தரமூர்த்திநாயனார் 4. மாணிக்கவாசகர்

12. திருநாவுக்கரசர் பிறந்த நாடு.
1. சோழநாடு 2. சேரநாடு
3. திருமுனைப்பாடிநாடு 4. பாண்டிநாடு

13. ஆளுடைய அடிகள் என்னும் மறுபெயரை உடையவர்.
1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர்
3. சுந்தரமூர்த்திநாயனார் 4. மாணிக்கவாசகர்

14. உலகத்தின் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் காரணமாக அமைவது
1. ஆணவம் 2. மாயை 3. கன்மம் 4. ஆகாமியம்

15. சிவஞான போதத்தை அருளியவர்
1 மெய்கண்டார் 2. பிரமபுரேசர் 3. மறைஞானசம்பந்தர் 4. சிவஞானதர்சினியார்

16. குருவின் முழங்கை வழியாக ஒழுகிய கூழை அருந்தியவர்.
1. மனவாசங்கடந்தார் 2. சிற்றம்பல நாடிகள்
3. பரஞ்சோதி முனிவர் 4. உமாபதி சிவாசாரியார்

17. திருவாவடுதுறை ஆதினத்தை தாபித்தவர்.
1. பிரமபுரேசர் 2. நமச்சிவாய தேசிகர்
3. அருணந்திதேவர் 4. ஆலால சுந்தரர்

18. " யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதை தமது வாழ்வின் ஆதார சுருதியாக கொண்டவர்கள்
1. சித்தர்கள் 2. தேவர்கள் 3. முனிவர்கள் 4 .அசுரர்கள்

19. திருமந்திரம் கொண்டுள்ள பாடல்களின் எண்ணிக்கை
1. 1000. 2. 13000 3. 3000 4. 12000

20. பெரிய புராணத்தின் முதற் பகுதியாக அமைவது.
1. வித்யாச் சருக்கம் 2. மதுரைச் சருக்கம்
3. திருச்சதச் சருக்கம் 4. திருமலைச் சுருக்கம்

21. திருமகலில் திருஞானசம்பந்தரை தரிசித்த நாயனார்
1. அப்பர் 2. சிறுதொண்டர் 3. கண்ணப்பர் 4. சேரமாள் பெருமாள்

22. யசுர்வேத "சதருத்திரியம்" போற்றும் மூர்த்தியாக விளங்குபவர்.
1. யமன் 2. வருணன் 3. அக்கினி 4. உருத்திரன்

23. வேதங்களில் சமய ஆசாரங்களைப் பற்றிக் கூறும் பகுதியாக அமைவது.
1. கர்ம காண்டம் 2. ஞானகாண்டம் 3. உபாசனை காண்டம் 4. தேவ காண்டம்

24. மணமக்கள் வாழ்க்கையில் புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல் என்பவற்றை கடைபிடிக்க வலியுறுத்தும் சடங்காக நடைபெறுவது.
1. அருந்ததி காட்டல் 2. ஏழடி நடத்தல்
3. கணையாழி எடுத்தல் 4. அம்மி மித்தல்

25. சனிஸ்வர பகவானுக்கு உகந்த நிறமாவது.
1. செம்மஞ்சள் 2. கறுப்பு 3. பச்சை 4. சிவப்பு



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

26. ஆண்டிற்கு ஒருமுறை அனுட்டிக்கப்படும் முருக விரதமாவது
    1. சுக்கிரவார விரதம்
    2. கார்த்திகை விரதம்
    3. பூரணை விரதம்
    4. கந்த சஷ்டி விரதம்

27. பஞ்சாங்கம் கூறும் அயனங்களாக உள்ளவை.
    1. உத்திராயணம், தட்சிணாயணம்
    2. அயனம், சயனம்
    3. நட்சத்திரம், யோகம்
    4 கரணம், வாரம்

28. அகதூய்மைக்கு வழிவகுப்பது.
    1. கடமை
    2. வாய்மை
    3. அகிம்சை
    4. நட்பு

29. திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடி அருளியவர்.
    1. சுந்தரர்
    2. சேக்கிழார்
    3. நம்பியாண்டார் நம்பி
    4. திருமூலர்

30. மகோற்சவத்தில் கொடியிறக்கல் குறித்து நிற்பது.
    1. பசு
    2. ஆணவம்
    3. கன்மம்
    4. ஆன்மமுக்தி

31. வேதாந்த மரபு சார்ந்த கவிதைகளை எழுதிய சமய பெரியார் என்னும் பெருமை பெற்றவர்
    1. விபுலானந்தர்
    2. இராசரத்தினம்
    3. விவேகானந்தர்
    4. இராம கிருஷ்ணர்

32. அறிவிக்காவிட்டால் அறியமாட்டாத பொருளாக உள்ளது
    1. மாயை
    2. பசு
    3. பதி
    4. பாசம்

33. சைவ சமயத்தின் சிறப்பு நூல்.
    1. வேதம்
    2. உபநிடதம்
    3. ஆகமம்
    4. திருக்கோவையர்

34. திருவருட் பயனை அருளியவர்.
    1. மெய்கண்டார்
    2. நமசிவாய தேசிகர்
    3. சதாசிவம்
    4. உமாபதி சிவாசாரியார்

35. ஆணவ மலம் மாத்திரம் கொண்ட ஆன்மாக்களாக உள்ளவை.
    1. சகலர்
    2. விஞ்ஞானகலர்
    3. பிரளலாகலர்
    4. முக்தர்

36 – 40 வரையான வினாக்களுக்கு அட்டவணையை அவதானித்து விடை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| A யட்ச ராத்திரி | E கட்டளை | I அகத்தியர் | M பட்டினத்தார் |
| B நிர்மலன் | F கும்பாபிசேகம் | J பரமசிவன் | N ஜெகத் ராத்திரி |
| C மந்திரம் | G சுகராத்திரி | K துதி | O பரம் பொருள் |
| D மகோற்சவம் | H ஈஸ்வரன் | L நித்தியபூசை | P பத்திர கிரியார் |



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

36. இறைவனைக் குறிக்கும் பெயர்களுடன் தொடர்புடைய எழுத்துக்களாக அமைபவை.
1. A,D,E,F 2. B,F,G,H 3. G,J,K,O 4. B,H,J,O

37. கோயிலுடன் தொடர்புடைய விழாக்களைக் குறிப்பது.
1. B,C,D 2. D,F,L 3. D,E,F 4. F,G,I

38. வட பாரதத்தில் தீபாவளியை குறிக்கும் வேறு பெயர்களாக அமைந்த தொகுதி.
1. A,G,N 2. A,D,E 3. G,H,I 4. N,O,P

39. அதர்வ வேதத்துடன் தொடர்புடைய தொகுதி.
1. A,C,D 2. E,G,H 3. C,E,K 4. K,L,M

40. சித்தர்களுடன் தொடர்புடைய தொகுதி.
1. I,M.P 2. I,J,K 3. H,M,N 4. N,O,P

**(1 x 40 = 40 புள்ளிகள்)**

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி – 11

**முதலாம், இரண்டாம் வினாக்கள உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**1. சுருக்கமாக விடை எழுதுக.**

I. பஞ்சாங்கத்தில் அடங்குவன யாவை?.

II. விரதம் என்றால் என்ன?

III. விநாயக சஷ்டி விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?.

IV. பண்டிகை காலத்தில் சைவர்கள் தவிர்க்க வேண்டியவை யாவை?

V. "பாணிக்கிரகணம்" என்பதனால் கருதப்படுவது யாது?

VI. சேர் பொன் இராமநாதன் கட்டடிய கருங்கற் கோயில் எது? அது எங்கே அமைந்துள்ளது?

VII. பாண்டிய மன்னனின் கூன் எவ்வாறு நிமிர்ந்தது?

VIII. நாட்டார் வழக்கில் மாணிக்க வாசகர் வழங்கிய பக்தி பனுவல்கள் இரண்டினை எழுதுக.

IX. மெய்கண்ட தேவரின் சீடர்கள் இருவரை எழுதுக.

X. "பட்டகட்டையில் பகல் குருடு போகின்றது பார்" என்னும் மகாவாக்கியம் யாரால் யாருக்கு கூறப்பட்டது?

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

**2. பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டினையும், அவற்றின் பொழிப்புரைகளையும் எழுதுக.**

I. "மீளா அடிமை.........."

II. "பால் நினைந்து தூட்டுந்.........."

III. "கற்றவர் விழுங்கும்........"

IV. "பாலுக்குப் பாலகன்......."

V. "யாவருக்கும் மாமிறை.........."

10 புள்ளிகள்



agaram.lk

**3. “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” (திருமூலர்)**

I. ஈழத்து சித்தர்கள் இருவரை எழுதுக.
II. திருமந்திரத்தின் முதலாம் தந்திரத்தின் சாரம் யாது?
III. சிவயோகியார் திருமூலரான வரலாற்றை சுருக்கி எழுதுக.

10 புள்ளிகள்

**4. “சிந்தையால் வந்தன் திருவடி அடைந்தேன” (சுந்தரர்)**

i. சுந்தரமூர்த்தி நாயனரின் தாய் தந்தையர் யாவர்?
ii. அவருக்கு வன்றொண்டன் எனும் பெயர் எவ்வாறு ஏற்பட்டது?.
iii. சுந்தரர் சத்தியத்தை மீறியதால் பார்வை இழந்து மீண்டும் கண் பார்வை பெற்ற வரலாற்றை எழுதுக.

10 புள்ளிகள

**5. “எந்நாட்டவருக்கும் இறைவனானவன் தென்னாட்டில் சிவன் எனப போற்றப் பெற்றான்”**

I. சைவ சிந்தாந்தம் கூறும் முப்பொருள்களும் எவை?
II. ஆணவத்தின் இயல்புகள் மூன்றினை எழுதுக.
III. சைவ சிந்தாந்தம் கூறும் பசுவின் தன்மையை விளக்குக

10 புள்ளிகள

**6. “ஆரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல் நிரந்தர நீற்றொளி யால்நிறை தூய்மையால்**
**புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலாய் புரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது”**
**(பெரியபுராணம்)**

I. பெரியபுராணம் எத்தனையாந் திருமுறை, யாரால் பாடப்பட்டது?
II. இப் பாடலில் சிவசின்னங்களை பற்றி எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
III. பெரியபுராணம் கூறும் சிவனடியார் சிறப்புகள் ஐந்தினை குறிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளில் இரண்டினைத் தெரிந்து சிறுகுறிப்பு எழுதுக.**

I. சுவாமி விபுலானந்தர்
II. இருக்கு வேதம்
III. புரட்டாதிச் சனி விரதம்
IV. திருவருட்பயன் கூறும் திருவருளின் தன்மை

**(10 புள்ளிகள்)**

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk